[1972 ஆகஸ்ட் 21

மாநகர் போக்குவரத்து

* 225 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள பக்கிங்ஹாம் கால்வாயைத் தூர்த்துவிட்டு அங்கே பாதாள ரயில் போக்குவரத்தை ஏற்படுத்தவும், துரித போக்குவரத்தினை துவக்கவும், திட்டக் கமிஷனின் நகர்ப் போக்குவரத்து ஆராய்ச்சிக் குழு ஆலோசனை ஏதும் கூறியுள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலைமையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தினிடத்திலே இதுபோன்ற பாதாளரயில் விடும் திட்டம் பரிசீலனையில் இருப்பதைப் பத்திரிகையில் பார்த்ததாக எனக்குக் கவனம். எனவே இதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திட்டக் கமிஷனின் நகர்ப் போக்குவரத்து ஆராய்ச்சிக் குழுவினிடத்திலே இதற்கு ஆலோசனை இல்லை என்று சொன்னேன். மாநில அரசினிடத்திலே அப்படிப்பட்ட ஆராய்ச்சி இருக்கிறது. டைரக்டர் ஆப் டவுன் பிளானிங் அவர்களும் சீப் எஞ்சினியர், ஹைவேஸ் அவர்களும் இதுபற்றி நடவடிக்கை எடுக்கப் பரிசீலனை செய்து இருக்கிறார்கள். அதைப்பற்றி டவுன் பிளானிங் டைரக்டர் அவர்கள், இந்தத் திட்டத்தின் அடிப்படையில் சர்குலர் ரயில்வே ஏற்படுத்த முடியுமா என்று பரிசீலனை செய்து அதைப்பற்றி ரயில்வே இலாகாவோடு தொடர்புகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திட்டங்கள் இன்னும் நடைமுறைக்கு வர நீண்டகாலம் ஆகும். ஆகவே அதுவரையிலும் காத்திராமல் எப்படி நம்முடைய அரசாங்கம் கூவத்தைச் சீரமைத்ததோ அதைப்போன்று பக்கிங்ஹாம் கால்வாயையும் சீரமைத்துப் படகுப் போக்குவரத்து ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பக்கிங்ஹாம் கால்வாயைத் தூர் எடுப்பதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டம் தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அன்டர்கிரவுண்ட் ரயில் விடுவதுபற்றி

1972 ஆகஸ்ட் 21]

ஆராய்ச்சி நடத்தப்படுகிறது. பக்கிங்ஹாம் கால்வாயை தூர் எடுப்பதுபற்றியும் அதை அடுத்தே ஒரு பாதையைப் போடவும் பரிசிலனை செய்யப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Have the Government completed the Cooum Canal Scheme?

MR. DEPUTY SPEAKER: That is not relevant.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தனியாகக் கேள்வி போடவும்.

Overbridges for Madurai.

* 226 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the construction of the two overbridges in Madurai City at the Railway level crossings have been completed; and

(*b*) if not, the probable date by which the works will be completed?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) சுப்பிரமணியபுரத்திலே கட்டப்படுகிற மேம்பாலம் விரைவிலே முடிவடையும். மீனுட்சி மில்ஸ் மேம்பால வேலை துரிதமாக நடைபெறுகிறது. 1973-ஆம் ஆண்டிற்குள் முடிவடையும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், மதுரையிலிருந்து விருதுநகர் போன்ற மற்ற இடங்களுக்குப் போவதற்கான பகுதிகளிலேதான் இந்த சுப்ரமணியபுரம் மேம்பாலமும், மீனுட்சி மில்ஸ்மேம்பாலமும் இருக்கின்றன. இந்த வேலைகள் ஒரு ஆண்டுக்கு மேலாக நடக்கின்றன. ஆகவே இந்த வழியாகப் போக்குவரத்து நடக்காமல் வேறு வழியாகத்தான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இந்த மேம்பாலங்களைக் கட்டி முடிக்க 1973-ஆம் ஆண்டு கடைசிவரை ஆகும் என்ருல் இடைஞ்சல் ஆகத்தான் இருக்கும். ஆகவே இந்த ஆண்டு முடிவிற்குள்ளாகவாவது இந்த வேலைகளை முடித்துவிடுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சுப்ரமணியபுரம் மேம்பாலம் கிட்டத்தட்ட முடிவடைந்துவிடும் நிலையில் இருக்கிறது என்று சொல்லலாம். மீனுட்சி மில்ஸ் மேம்பாலத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தைக் கவனத்தில் கொண்டு விரைவாக நடவடிக்கை எடுக்கச் சொல்லலாம்.